# 14 மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு விருது

## இந்திய பசுமை வளர்ச்சி கழகம் வழங்கியது

சென்னை, மார்ச்.13–
சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம், மெட்ரோ ரெயில் நிலையங்களை பசுமை மயமாக்க பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில் இந்திய பசுமை வளர்ச்சி கழகம் சார்பில் சென்னையில் உள்ள 14 மெட்ரோ ரெயில் நிலையங்களை சிறந்த பசுமை ரெயில் நிலையங்களாக அங்கீக ரித்து அதற்கான சான்றிதழை வழங்கியுள்ளது.

இதற்கான விருதை இந்திய பசுமை வளர்ச்சி கழக சென்னை தலைவர் சி.என்.ராகவேந்திரன், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன நிர்வாக இயக்குனர் பங்கஜ் குமாரிடம் வழங்கினார். இதற்கு முன்னர் திருமங்கலம், அண்ணாநகர் எழும்பூர் உள் ளிட்ட 13 மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.